2011

நவம்பர்

1

செவ்வாய்

**புனிதர்கள் தினம்**

காலை

வெளி 7:9–17

தி. வ.

வெளி 7 : 15

**“..சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்”**

மாலை

எரே. 31:31–34

சிந்தனை

**சிறப்புக்களை விரும்புகிறவன் சிலுவைக்கு தோள் கொடுக்க முடியுமா.**

மன்னா சேர்ப்போம்

# புனிதர்கள் தினம்

*எதை இழந்தோம் எவைகளை இழப்பதற்கு ஆயத்தமாயிருக்கின்றோம்? புனிதர் தினத்தை நினைவு கூர என்ன தகுதியிருக்கின்றது என்பதை அறிய வேண்டாமா?*

*சிமிர்னா நகரத்து பேராயர் போ—கார்ப் கி. பி. 155—ல் ஜனவரி 26—ம் நாள் அன்று தீக்கு இரையாக்கப்பட்டு இரத்த சாட்சியாய் மரித்தார். ரோம படைவீரர்கள் கிறிஸ்துவை மறுத—த்தால் உனக்கு விடுதலை என்றார்கள். “நான் 86 ஆண்டு கடவுளை சேவித்தேன் ஒரு தீமையும் செய்யாத கடவுளை நான் எப்படி மறுத—ப்பேன்” என்றார். விளைவு 86—வயது முதுமையானவர் உயிரோடு எரிக்கப்பட்டார். எலும்புகள் கூட இருக்ககூடாது என்று சாம்பலாகும் வரை எரியூட்டப்பட்டார். கடவுளுக்கு தான் இரத்த சாட்சியாய் மரிப்பதை குறித்து நன்றி சொன்னார். இவரது மரணத்தை கண்ட அனேகர் மனம் மாறினர்.*

*இரத்தசாட்சி மரணம், அவரது பொறுமை அனேகரை மனம் மாற்றியது. போ—கார்பின் எலும்புகளை கூட்டி பொன்னைவிட மதிப்புமிக்கதாக அக்கால கிறிஸ்தவர்கள் கண்டனர். இந்த தூயவரின் மரணநாளே தூயவர் பிறந்த நாளாக கொண்டாடப்பட்டது. இதுவே தூயவர் நாளின் ஆரம்பம். போ—கார்ப்பின் நண்பர்கள் கூறியது*

*“அங்கே நாம் இணைந்திருப்போம் மகிழ்ச்சியுடன் ஆனந்தத்துடன் அவரது இரத்த சாட்சி மரணத்தை பிறந்த நாளாக கொண்டாடிட கிறிஸ்துவுக்காக மரணமடைந்தவரை நினைவுகூர இனியும் கிறிஸ்துவுக்காக பாடுபடுவோரை ஆயத்தப்படுத்த” செல்வத்தையே இழக்க விரும்பாத கிறிஸ்தவம் வாழ்வை இழக்க முன்வருமாறு. பகிர்வதை விரும்பாத கிறிஸ்தவன் பற்றுறுதியில் நிலைக்க முடியுமா?— ஆணவத்துடன் வாழும் கிறிஸ்தவன் மாதிரியாய் முன்நிறுத்தப்பட முடியுமா— காயங்கள் கட்டாத கிறிஸ்தவன் நல்ல சமாரியனாக முடியுமா.*

*இத்தகைய குணமுடையோரே யோவான் கண்ட அரியணையின் முன்நின்ற எண்ணமுடியாத கூட்டம்.*



2011

நவம்பர்

2

புதன்

**அனைத்து ஆத்துமாக்கள் தினம்**

காலை

1தெச. 4:1–9

தி. வ.

1தெச. 4 : 7

**“தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.”**

மாலை

யோசு. 3:1–5

சிந்தனை

**கிறிஸ்தவன் கிறிஸ்துவையுடையவன் கிறிஸ்து மட்டுமே அவன் வாழ்வில் வெளிப்பட வேண்டும்.**

மன்னா சேர்ப்போம்

# பரிசுத்தராயிருங்கள்

*1818—ம் ஆண்டு கல்கத்தாவில் முதல் முதலாக வங்காள மொழியில் சமாசார்பன் என்ற வங்காள மொழிப்பத்திரிகை வெளியிடப்பட்டது. இப்பெருமை செராம்பூர் மூவர் என அழைக்கப்படும் மிஷனெரிகளான வில்—யம்கேரி, வில்—யம் மார்ஷ்மன், வில்—யம் வார்ட் என்பவர்களை சாரும். அக்காலத்தி—ருந்த சமூக சமய தீமைகளை இப்பத்திரிகை சுட்டிக்காட்டியது. குழந்தைகளை ப—கொடுத்தல், குழந்தை திருமணம், உடன்கட்டை ஏறுதல் இவைகளெல்லாம் சமூகத்தில் பலர் நன்மையாக கண்டனர். தொடர் எழுத்துக்கள், கட்டுரைகள் இத்தீமைகளை அகற்ற உதவியது.*

*பவுல் ரோம சாம்ராஜ்யத்தில் பாலுறவி—ருந்த தீமைகளைச் சொல்— பாவத்தி—ருந்தவர்களை தூயவர்களாக்கும்படி வ—யுறுத்தினார். முறைதவறிய பாலுறவை வாழ்வின் ஒருபகுதி என்று எண்ணினர். முறைதவறிய பாலுறவு தீமை என கருதாத மக்களுடன் கிறிஸ்தவர்களும் வாழ்ந்து வந்ததால் இச்செயல் திருச்சபைக்குள்ளும் வந்தது. பவுல் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவுடன் பாவச் செயல்களை விட்டுவிட வேண்டும் என்று கூறினார்.*

*தற்கால சூழல் தவறான உறவுகள் சரி என்ற நிலைப்பாடுக்குள் நின்று கொண்டிருக்கின்றது. ஊடகங்கள் இன கவர்ச்சிகளையும், தவறான உறவுகளையும் சரி என்ற அளவில் மிகைப்படுத்தி வருகின்றது. இச்சூழ—ல் கடவுளின் மக்கள் தூய வாழ்வுக்கு மாதிரியாய் அமைய வேண்டும். உலகசூழ—ல் கறைபடாத சரீரமாய் காத்துக்கொள்ளவேண்டும். சரீரம் தூய்மையுடையது. இது அசுத்தமான உலக வாழ்விற்கல்ல பரிசுத்த வாழ்வுக்கே பிரித்தெடுக்கப்பட்டிருக்கின்றது. சரீர வாழ்வை கறைபடுத்துவோரை பவுல் எச்சரித்து இத்தகைய தவறு செய்வோர் மனிதனுக்கு எதிராக அல்ல தூய ஆவிக்கு எதிராக கடவுளுக்கு எதிராக தவறு செய்கின்றான். தூய ஆவிக்கு எதிரான பாவம் மன்னிக்கமுடியாத அளவு கடினமானது ஆகவே மனம்திருந்தி தூயராய் வாழ வேண்டும்.*

2011
நவம்பர்
3
வியாழன்

காலை
மத். 25:1–13

தி. வ.
மத். 25 : 13
**"மனுஷகுமாரன் வரும் நாளையாவது... நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்"**

மாலை
சங். 4

சிந்தனை
**விழித்திருப்பது தூங்காமல் இருப்பதல்ல அவர் வருகைக்காய் ஆயத்தமாவது.**

# விழித்திருங்கள்

அதிகமான மழை பெய்துகொண்டிருந்தது அழிவு நெருங்கி கொண்டிருந்ததை அறிந்து எந்த நேரத்திலும் பெருவெள்ளம் வரலாம் விழித்திருங்கள் என்ற எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. அணைபகுதியில் வாழ்ந்த கிராம மக்கள் கூடி பேசினர் இரவு அனைவரும் விழித்திருக்க வேண்டும் என முடிவு செய்தனர். இரவு 12 மணி வரை விழித்திருந்து காத்தனர். அழிவு வரவில்லை. பக்கத்துவீட்டில் வெளிச்சம் இருக்கின்றது. நாம் நித்திரை செய்வோம் என எல்லோரும் நித்திரை செய்தார்கள் இரவில் எதிர்பார பெருவெள்ளம் கிராமத்தை சூழ்ந்தது. பெரும் அழிவை கிராமம் சந்தித்தது.

நாட்டை காக்க யுத்த வீரர்கள் விழித்திருக்கின்றார்கள். வான் வெளியை கண்காணிக்க ராடார்கள், கட—ல் வரும் அலைகளை கணிக்க சுனாமி எச்சரிக்கை கருவி. இவைகள் மனிதன் அழிவி—ருந்து விழித்திருக்க தட்டி எழுப்புகின்றது. ஆன்மீக வாழ்வில் விழித்திருக்க திருமறை எச்சரிக்கை தருகின்றது. பாவ வாழ்வில் விழித்திருக்க, பரிசுத்த வாழ்வில் விழித்திருக்க, ஆன்மீக வாழ்வில் விழித்திருக்க, ஆயத்தமுடன் விழித்திருக்க திருமறை வழிகாட்டுகின்றது. ஆண்டவரின் வருகை அழிவுக்குரிய நாள் என்று பயந்து விழித்திருக்க வேண்டும் என்றல்ல, நல்வாழ்வு வாழும்படி விழித்திருக்க வேண்டும். பத்து கன்னிகைகளும் காத்திருந்தனர். ஆனால் ஆயத்தம் ஐந்து பேரிடம் மட்டுமே இருந்தது. கிறிஸ்தவ வாழ்வில் கிறிஸ்துவை சந்திக்க எல்லாரும் காத்திருந்தாலும் நினையாத நாளில் ஆயத்தமுடன் இருப்போரே இறைவாழ்வுக்கு தகுதியானவர்கள். நாள் குறித்தும், அதிசீக்கிரம் என்றும், அச்சமூட்டும் செய்திகளை கேட்டு விழித்திருப்பதல்ல இயல்பாகவே நம் குணங்கள் மாற வேண்டும். ஆண்டவரை ஏற்று வாழ்வோர் எப்போதுமே ஆண்டவர் விரும்பும் குணங்களை நமக்குள் பதித்து வாழவேண்டும்.

ஆண்டவரே ஆண்டவரே என்று சத்தமிடுபவரல்ல (மத். 7 : 12—21) தலைமுறை கிறிஸ்தவர் என்பவருமல்ல (மத். 3 : 8, 9) பிறரை ஒடுக்கி செல்வம் சேர்த்து கொடுப்பவருமல்ல (மத். 19 : 16—22) இயேசுகிறிஸ்துவில் இயல்பில் தன் சாயலை இவ்வுலகில் தருபவரே விழித்திருப்பவர்கள்.



2011
நவம்பர்
4
வெள்ளி

காலை
கொலோ 3:1–11

தி. வ.
கொலோ. 3:2
**"பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்."**

மாலை
சங். 89:1–21

சிந்தனை
**உலகமா? முழு வாழ்வா?**

# மேலானவைகளை நாடுங்கள்

செல்வ செழிப்புடன் வாழ்ந்த மனிதன் வயது முதிர்ந்த சூழ—ல் தன் கிராமத்து மக்களைப் பார்த்து நீங்கள் வாழும் இடம் என்னுடையது. ஆனால் இவைகளை உங்களுக்கு தரப்போகின்றேன் என்றார். அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தபோது ஒரு கட்டளையை கொடுத்தார். காலை முதல் மாலை இருள் வருவதற்குள் எவ்வளவு தூரம் சென்று வருவீர்களோ அதை உங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ளுங்கள் என்றார். காலை வந்தது கிராமத்தினர் ஓட ஆரம்பித்தனர்.

ஒருவன் ஓடினான் இருள் வருவதற்குள் திரும்பினான் ஆனால் மரித்துப்போனான் இது பயனில்லா ஓட்டம். ஒருவன் ஓடினான் திரும்பி வரமுடியவில்லை திட்டமில்லா ஓட்டம். ஒருவன் ஓடினான் திரும்பாமல் ஓடிக்கொண்டிருந்தான் பேராசையின் ஓட்டம். ஒருவன் ஓடினான் பாதியில் திரும்பிபோனான் நம்பிக்கையில்லா ஓட்டம்.

உலக செல்வத்தை தேடி மனிதன் ஓடிக்கொண்டிருக்கின்றான். ஆனால் இவைகள் மரணத்தின்போது மனிதனோடு உடன்வருவதில்லை பின் ஏன் ஓடுகின்றோம் என்பதை சிந்திக்க வேண்டாமா? எவைகளை தேடி ஓடுகின்றோம் சிந்தித்து பார்? பெருமையை தேடும் ஓட்டங்களின் வேகம் என்ன? பணத்தை தேடும் ஓட்டங்களின் வேகம் என்ன? பகைக்க தேடும் ஓட்டங்களின் வேகம் என்ன? மதுபானத்தை தேடும் ஓட்டங்களின் வேகம் என்ன? ஆடம்பரத்தை தேடும் ஓட்டங்களின் வேகம் என்ன? அழகினை தேடும் ஓட்டங்களின் வேகம் என்ன? வரதட்சணை தேடும் ஓட்டங்களின் வேகம் என்ன? மனிதர் மரணத்திற்கு பின் இவைகள் எங்கு செல்லும்? என கேள்வி எழுப்பி பெருமையை விட தாழ்மை மேலானவையல்லவா? கோபத்தை விட சாந்தம் மேலானவையல்லவா? பகையை விட நட்பு மேலானவையல்லவா? பொருளாசையை விட பகிர்வு மேலானவையல்லவா? தீமையை விட நன்மை மேலானவையல்லவா? பின்னர் ஏன் இவைகளை தேடவில்லை சிந்தனை செய்.

# கனம்பண்ணுங்கள்

2011
நவம்பர்
5
சனி

காலை
1பேது. 2:11–17

தி. வ.
1பேது. 2 : 17
**“எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்”**

மாலை
சங். 22:23–31

சிந்தனை
**கனம்பண்ணுதல் மற்றவர்க்கு நாம் தரும் அங்கீகாரம்.**

மன்னா சேர்ப்போம்

வரையறை உண்டா கனம்பண்ணுதலுக்கு? எவர்களை கனம்பண்ணவேண்டும்? எதற்கு கனம்பண்ணவேண்டும்? எப்படி கனம்பண்ண வேண்டும்? கற்றுதரும் ஆசிரியரை கனம்பண்ணுகின்றோம் மற்ற ஆசிரியர்களை கனம்பண்ணவேண்டாமோ? தெரிந்த முதியவர்களை கனம்பண்ணுகின்றோம் தெரியாத முதியோர் களையும் கனம்பண்ணவேண்டாமோ?

கனம்பண்ண தெரியாத வாழ்வு ஆன்மீக குறைவுடையது. கிறிஸ்துவை அறியாதவர்களிடம் உள்ள செயல். ஆகவே பேதுரு புறஇனமக்கள் உங்களை குறைவுடையவர்களாய் காணாதபடிக்கு எச்சரிக்கையாய் வாழ்ந்து நற்கிரியைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று கூறுகின்றார். தொடக்கத் திருச்சபை விசுவாசிகள் அரச கட்டளைகளால் துன்புற்றனர். கிறிஸ்தவத்தின் வளர்ச்சியை தடுக்க அரசு துன்புறுத்தலை அறிமுகப்படுத்தியது. கிறிஸ்தவர்களை துன்பப்படுத்த அரசு கொண்டுவருகின்ற சட்டங்களுக்கு கீழ்ப்படியவேண்டுமா? என்ற கேள்வி ஆதி கிறிஸ்தவர்களிடம் எழுந்தது. பேதுரு குறிப்பிடும் போது அநீதியுள்ள அரசனாயினும், அதிகாரியாயினும், தீமை செய்கின்றவராயினும் கீழ்ப்படியுங்கள், கனம்பண்ணுங்கள் என்றார். காரணம் இயேசுகிறிஸ்துவின் அடிப்படை ஆன்மீகம் அன்பை மையமாக கொண்டது. கண்ணுக்கு கண் பல்லுக்கு பல் என்ற பழைய சட்டம் அன்பினால் முறிக்கப்படுகின்றது. அறைபவருக்கு அடுத்த கன்னத்தை திருப்பிக்காட்டும் ஆன்மீகமே கிறிஸ்தவ ஆன்மீகம்.

மனிதனாலே பதவிக்கு வந்த அரசனாயினும் கனம் கொடுக்க வேண்டும். அரசன் மட்டுமல்ல அனைவருக்கும் கனம் கொடுக்க வேண்டும். தொடக்க காலத்தில் கிறிஸ்தவர்கள் அரசு அதிகாரிகளை கனம்பண்ணுவதில்லை என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இந்த கருத்தை மாற்றவே அனைவரையும் கனம்பண்ணவேண்டும் என்று கூறுகின்றார். குறைவாயிருப்பதை நிறைவு செய்வதே திருச்சபையின் கடமை



# ஆன்மீகத்தில் வளருங்கள்

2011
நவம்பர்
6
ஞாயிறு
**உலக திருமறைப்பள்ளி தினம்**

காலை
நீதி. 23:15–26

தி. வ.
நீதி. 23 : 17
**“நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு”**

மாலை
எபே. 6:1–4

**சிந்தனை**
**பெற்றோரே ஆன்மீக கல்விக்கான விதை விதைப்பவர் மற்றவர்களே நீரூற்றுபவர் உரமூட்டுபவர்.**

மன்னா சேர்ப்போம்

குட்டி மனிதர்களான குழந்தைகள் குட்டி மன்னர்களாக அரண்மனையில் இருக்க வேண்டியவர்கள். குழந்தைகள் குணத்தை முழுமையாக கண்டவர் இயேசுமட்டுமே. ஆகவே குழந்தைகள் இறையரசுக்குரியவர்கள் என்றார்.

உலக திருமறைப்பள்ளி நாளான இன்று குழந்தைகளின் நிலையினை மறுமுறை சிந்திக்க வேண்டும். வீதியில் விளையாடியவர்கள் விவி—யத்தை கற்றுக்கொள்ளவே 1780—ம் ஆண்டு ராபர்ட் ரெய்க்ஸ் திருமறை பாடசாலையை ஆரம்பித்தார். இன்று விவி—யத்தை விட்டு வீதிக்குச் செல்லும் காலம் ஆரம்பித்துவிட்டது. இதை தடுக்காவிடில் வரும்காலம் தடுமாறிவிடும் மறுமுறை ராபர்ட்ரெய்க்ஸ் போன்றவர்கள் பிறக்க வேண்டிய சூழல் உருவாகிவிடும்.

சிறுவயதில் ஓய்வுநாட்பாடசாலை சென்ற குழந்தை 13 வயதாகும் போது ஓய்வுநாள் பாடசாலையை விட்டுவிட்டு ஓய்வுநாள் ஆராதனைக்கு மட்டும் சென்றது. 17 வயதான போது ஆலயத்தை விட்டு விட்டு இல்லத்தில் இருந்தது. 21 வயதானபோது ஞாயிறு அன்று வீட்டிலும் இல்லாது வீதிக்கு சென்றான் இது இன்றைய இல்லங்களை குறித்த கற்பனைகளே.

அறிவு வளர்கின்றது ஆன்மீகம் தேய்கின்றது காரணம் யார்? கிறிஸ்தவ குடும்பங்கள் ஆன்மீக வளர்ச்சியே அறிவு வளர்ச்சிக்கு ஆதாரமாக கொள்ளவேண்டும். ஆன்மீக வளர்ச்சியில் வளர்க்கப்பட்ட சாமுவேல் இஸ்ரவேலருக்கு சிறந்த ஆன்மீக தலைமை ஏற்றார். ஆன்மீக அறிவை தேடிய சாலொமோன் உலக அறிவையும் அதிகமாய் பெற்றார். தானியேல், அனனியா, மிஷாவேல், அசரியா ஆகிய இளைஞர்கள் ஆரம்பத்தில் பெற்ற இறைஞானத்தை அன்னிய நாட்டில் ஆண்டவரை அறிவிக்கும் கருவிகளானார்கள்.

பெற்றோரில் பாசமில்லை பெருகுகிறது முதியோர் இல்லம். பிள்ளைகளிடம் அக்கரை இல்லை பெருகுகிறது சிறைச்சாலை. குழந்தைகளின் முதல்நிலை பள்ளி இல்லமே. குழந்தைகள் பேரில் கரிசனை கொள்வோம்.

## கீழ்ப்படியுங்கள்

2011
நவம்பர்
7
திங்கள்

காலை
லூக். 2:42–52

தி. வ.
லூக். 2 : 51
**"அவர் (இயேசு)... அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்"**

மாலை
யோசு. 24:14–24

சிந்தனை
**கீழ்ப்படிதல் வலுக்கட்டாயமானதல்ல வாழ்வி–ருந்து வருவது.**

மன்னா சேர்ப்போம்

படிகள் பல ஏறுவதற்கு கீழ்ப்படிதலே அடித்தளம். பெற்றோருக்கு கீழ்ப்படி, முதியோருக்கு கீழ்ப்படி, ஆசிரியருக்கு கீழ்ப்படி நல்வழிகாட்டுவோருக்கு கீழ்ப்படி அனைத்திற்கும் மேலாக ஆண்டவருக்கு கீழ்ப்படி.

கீழ்ப்படிதலே வாழ்வில் உயர்வதற்கு வழிகாட்டுகின்றது. கடவுளுக்கும், மனிதனுக்கும் கீழ்ப்படிதலே தெய்வீக வளர்ச்சியை தருகின்றது.

பண்டிகை கால பயணங்கள் இஸ்ரவேல் மக்களுக்கு பக்தி பயணங்களாக அமைந்தது. சமய நம்பிக்கைகள், சமய போதனைகள், சமய பாரம்பரியங்கள், வீரப்பாதைகள், விடுதலை வரலாறுகள், பயணங்களில் நற்போதனைகளாக கற்றுக்கொடுக்கப்பட்டது. தனிமனித பக்தியைவிட கூட்டுபக்தி வாழ்வே இஸ்ரவேல் மக்களுக்கு முக்கியமானதாக அமைந்ததால் பெற்றோரே பக்தி வாழ்வை அதிகமாக கற்றுக்கொடுத்தனர். தூரத்தி—ருந்தாலும் சமீபத்தி—ருந்தாலும் 12—வயது நிரம்பிய ஒவ்வொரு ஆண்மகனும் யூதபண்டிகை கொண்டாட்டங்களில் பங்குபெறவேண்டும். இயேசுவும் யூத சட்டத்திட்டங்களுக்கு கட்டுப்பட்டு பெற்றோரின் பக்தி வழியிலே எருசலேம் ஆலயத்தில் பண்டிகை கொண்டாட சென்றார். ஆலய கடமைகளை 12—வயதில் பெற்றோர் துணையின்றியே தனிமனிதனாக கடமைகளை நிறைவேற்றலாம் என்பதற்கு அடையாளமாக ஆலயத்தில் அமர்ந்து விவாதித்தார் இயேசு.

இயேசு ஒருநாள் என்றல்ல கடமையை தீர்க்க வேண்டும் என்ற எண்ணங்களும் அல்ல ஆலயத்தில் அதிக நேரம் செலவிடவேண்டும் என்று விரும்பினார். தனக்குத் தேவையான விளக்கங்களை தாமே தேடி பெற்றுக்கொள்ளவிரும்பினார். இயேசு பெற்றுக்கொண்ட அறிவு தேவாலயத்தில் விவாதித்து விடைகாண வழிகாட்டினது. இந்த அறிவு பெற்றோரிடமிருந்து மட்டும் பெற்றுக்கொண்டதல்ல தெய்வீக அருள் இயேசுவில் இருந்ததால் பெற்றுக்கொள்ளப்பட்டது. தெய்வீக அருள் இயேசுவை தேடுவதற்கு மட்டுமல்ல நற்குணங்களுக்கும் அடிப்படையானது. ஆகவே இயேசுவின் கீழ்ப்படிதல் நற்குணங்களில் ஒன்றாக வெளிப்பட்டது.



## கர்த்தரில் நம்பிக்கையாயிருங்கள்

2011
நவம்பர்
8
செவ்வாய்

காலை
ஏசா. 26:1–7

தி. வ.
ஏசா. 26 : 4
**"கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்"**

மாலை
யோவா. 14:8–15

சிந்தனை
**கடவுளே எனக்கு எல்லாம் என வாழ்வதே நம்பிக்கை.**

மன்னா சேர்ப்போம்

—யோனார்டோ பாஃ என்னும் இறையியல் அறிஞரது வார்த்தைகளில் வெளிப்பட்ட விசுவாச அறிக்கை .

நான் இயேசுவை விசுவாசிக்கிறேன்
அவர் நம்மைப் போன்றவர்
நம்மைப் போன்றதொரு தனிமனிதர்
எனினும் நேர்மையானவர்
உண்மையானவர்

நகரமன்றத்தின் கதவுகளை
அவர் தாண்டவில்லை
சமுதாயத்தின் மரபு நிலையை மாற்ற
பணியாற்றினார்
அதற்காகவே கொல்லப்பட்டார்

அவரை உற்று நோக்கும் போது
அறிவு எப்படி மழுங்கி விட்டது
நம் முயற்சிகளெல்லாம் வீணடிக்கப்பட்டது
நம் கற்பனையெல்லாம் காய்ந்து விட்டது
என்பதை நான் காண்கின்றேன்.

காரணம்; அவரைப்போன்று நான் வாழவில்லை
அவர் இறந்தது வீண்
இது என் அன்றாடப் பயம், அச்சம்

அதிகாரத்திற்கு அஞ்சி தலை வணங்கி
அவரைக் கோயில்களில் புதைத்து விட்டனர்
அவரது புரட்சியை நாம் மறுத—த்து விட்டோம்
நமது வாழ்வில் மீண்டும் மீண்டும் உயரிக்கும்
இயேசுவை நான் விசுவாசிக்கின்றேன்.

என்றென்றும் தலைமுறை தலைமுறையாக நம்பும் நம்பிக்கையை ஏசாயா குறிப்பிடுகின்றார். நீதி வற்றிப்போனச் சூழ—ல் வற்றாத நீதியொன்று புரண்டு ஓடுகின்ற நீதிக்கான ஒருகாலமுண்டு அது எதிர்பார்ப்போடு வாழுகின்ற மேசியா யூகத்தில் நிறைவேறும்.

இன்றுள்ள சூழல் பட்டுப்போன ஈசாயின் அடிமரச் சூழலாயிருப்பினும் துளிர்விடும் காலம் ஒன்று தொலைநோக்கில் நம்பிக்கையாய் தெரிகின்றது என்பதை ஏசாயா முன்னறிவித்து என்றென்றும் நம்பும் நம்பிக்கையை தருகின்றார்.

**2011**
**நவம்பர்**
**9**
**புதன்**

காலை
2 இரா. 18:1–8

தி. வ.
2இரா. 18 : 7
**"...கர்த்தர் அவனோடிருந்தார்; அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று;"**

மாலை
2தீமோ. 1:3–18

சிந்தனை
**கடவுளை சார்ந்திருக்கும் போது நமது தவறுகள் உணர்ந்திட இயலுகிறது.**



# கர்த்தரை சார்ந்திருங்கள்

A.K. 47 துப்பாக்கிகளை வடிவமைத்து வழங்கிய ரஷிய டாக்டர் மைக்கேல் வருத்தமாகச் சொன்னாராம் தவறான தாக்குதல்களுக்கு A.K. 47 பயன்படுத்தும் ஒவ்வொரு தருணத்தையும் தொலைக்காட்சியில் பார்க்கும்போது கண்ணீர் வடிக்கின்றேன். பாதுகாப்பு பணிகளுக்காக வடிவமைக்கப்பட்ட A.K. 47 தீவிரவாதிகளின் சின்னமாக வளர்ந்து வருவது கண்டு ஜீரணிக்க முடியாது தவிக்கிறேன் என்றார்.

ஒரு கவிஞனின் ஆதங்கம்
படைத்தவனே பரிதபிக்கிறான் —என்பது
பகிரங்க உண்மை இன்று
கடவுள் படைச்ச உலகத்திலே மனுஷன் இல்லையடா
மனுஷன் படைச்ச உலகத்திலே கடவுள் இல்லையடா
ஆண்டவன் மனசைப் படைச்சுட்டான் —அதன்
பாதையை மனுஷன் அடைச்சுட்டான்.

படைப்பிலேயே கடவுளின் எதிர்பார்ப்பு மனிதன் கடவுளை சார்ந்திருக்க வேண்டும். இறைவனது விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதே. எசேக்கியா அரசரான காலம் இறைவனது விருப்பங்கள் நிறைவேறாத காலம் படைத்தவரை வணங்கவேண்டும் படைக்கப்பட்டவைகளை வணங்கக்கூடாது என்பது கடவுளின் கட்டளைகளில் ஒன்று. ஆனால் எசேக்கியா அரசராகும்போது விக்கிரகங்களையும், மேடுகளையும் வணங்கி வாழ்ந்து கொண்டிருப்பதை கண்டார். அரசர்களும் மேடைகளை தொழுகையிடமாக மாற்றினார்கள். எசேக்கியா தன் ஆட்சிகாலத்தில் முழுமையாக கர்த்தரை சார்ந்திருந்தார். மேடைகளை தகர்த்து வெண்கல சர்ப்பங்களை உடைத்தெறிந்து உண்மையான இறைபக்திக்கு வழிகாட்டினார். முன்னும் பின்னும் இருந்திராத கடவுளை சார்ந்திருத்தலை தனது வாழ்வில் எசேக்கியா உறுதிசெய்தார். கர்த்தரைவிட்டு ஒருபோதும் பின்வாங்கவில்லை கர்த்தர் கற்பித்த கற்பனைகளை கைக்கொள்ள தவறவும் இல்லை.



**2011**
**நவம்பர்**
**10**
**வியாழன்**

காலை
எபி. 12:1–13

தி. வ.
எபி. 12 : 13
**"உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப் படுத்துங்கள்"**

மாலை
நீதி. 24:1–14

சிந்தனை
**வழியாம் ஆண்டவரே நமது அளவு கோல்.**



# கர்த்தரின் வழியில் நடவுங்கள்

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது என்றார். சங்கீதக்காரனாகிய தாவீது எனது வாழ்வின் வழி காட்டி என் கர்த்தரே என்பது சங்கீதக்காரனின் ஆணித்தரமான நம்பிக்கை. எபிரேயருக்கு எழுதிய திருமுகம் சங்கீதக்காரனுடைய நம்பிக்கைக்கு நம்மை அழைக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் கடவுள் காட்டின வழியில் நடக்க அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் வழிகளை தீர்மானிக்க அனுமதிக்கப்படவில்லை. மோசே, ஆரோன் போன்ற தலைவர்களுக்கு கடவுள் வழியை காண்பித்தார் (யாத். 14 : 2). இன்ன இடத்தில் பாளயமிறங்கு, இவர்களை மேற்கொள், இன்னின்ன காரியத்தை செய் என கடவுளின் வழிகாட்டுதலை பெற்று இஸ்ரவேலரை வழிநடத்தினர்.

எப்போது அந்த வழிகாட்டுதலை புறக்கணித்து முன்னேறினார்களோ, புதிய தெய்வங்களை உண்டாக்க துணிந்தனர் (யாத். 32 : 1) விளைவு அனேகர் அழிந்தனர்.

கர்த்தருடைய வழியில் நாம் நடக்கவேண்டுமானால் நம்முடைய வழிகள் சரிசெய்யப்பட வேண்டும். வழிகள் சரிசெய்யப்படுவதற்கு அளவுகோல் தேவை. ஆண்டவர் இயேசுவே அந்த அளவுகோல். நானே வழி என்பது ஆண்டவர் நமக்கு கற்றுத் தந்திருக்கும் உண்மை.

ஆண்டவருடைய வாழ்வும் போதனையும் நமக்கு வழிகள். இந்த ஒரே ஒரு வழியில் நடப்பவர்கள் மட்டுமே பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியும் இந்நிலையை அடையவே ஆண்டவரின் வசனம் நம்மை பயிற்றுவிக்கிறது. இந்த பயிற்சியில் நம்மை இணைத்துகொள்வோம்.

# கர்த்தரின் சத்தம் கேளுங்கள்

**2011**
**நவம்பர்**
**11**
**வெள்ளி**

காலை
1சாமு. 3:1–21

தி. வ.
1சாமு. 3 : 9
**"கர்த்தாவே சொல்லும்; அடியேன் கேட்கிறேன்"**

மாலை
1கொரி.2:9–16

சிந்தனை
**திருமறையில் கர்த்தரின் சத்தம் கேட்போம்.**

பேராயர் V. S. அசரியா மிஷனெரிப் பணிக்காக அர்பணிப்போர் முன்னே வாருங்கள் என்று மிகப்பெரிய மிஷனெரி மாநாட்டில் அறைகூவலை விடுத்தார். இதைக்கேட்ட வா—பன் நீங்களே ஏன் ஒரு மிஷனெரியாக செல்லக்கூடாது என சத்தம் எழுப்பினான். இந்த சத்தத்திற்கு செவி கொடுத்தார். அதன் விளைவாக I.M.S.,N.M.S., C.S.I. போன்ற மாபெரும் இயக்கங்கள் உருவாக அடித்தளமிட்டார். தோர்ணக்கல் ஆண்டவரின் பூமியாக கனிந்தது.

ஆண்டவர் தமது பணிக்கென்று மக்களை அழைக்கிறார். மோசேயை கடவுள் எபிரேயரை விடுவிக்க அழைத்தார். மோசே கர்த்தரின் சத்தம் கேட்டார். எபிரேயர் விடுதலை பெற்றனர். அன்னாள் தமது பிள்ளை சாமுவேலை ஆண்டவர் பணிக்கு அர்பணித்தாள். ஆண்டவர் சாமுவேலை அழைத்தார். இந்த அழைப்பின் சத்தம் கேட்ட சாமுவேல் இஸ்ரவேலரின் மிகப்பெரிய தலைவர் ஆனார்.

வேகமான உலகில் பல சத்தங்கள், எரிச்சலூட்டும் கூச்சல்கள் பிறர் பேசுவதை கேட்க விரும்பாத மனநிலை "எனக்கு நானே" பேசி தீர்மானிக்கும் அனுபவங்கள். மனித சத்தங்களில் வெளிப்படும் நன்மையாயினும், தீமையாயினும் நாம் செய்ய திணிக்கப்படும் இக்கால சூழ—ல், கடவுளின் சத்தம் கேட்க நாம் முன்வர வேண்டும். அவரது சத்தத்தில் நமது பயண பாதை காண்பிக்கப்படும் தீர்மானங்கள் தெளிவுப்படும். அழைக்கப்பட்ட அழைப்பின் பணிகள் வெளிப்படுத்தப்படும். சாமுவேல் கடவுளின் மெல்—ய சத்தத்தை கேட்டு புரிந்திட இயலவில்லை. புரிந்தபோது இதோ அடியேன் என கடவுளின் சித்தத்திற்கு அர்ப்பணித்தது போல நாமும் அவர் சத்தம் கேட்டு அவர் சித்தம் செய்ய அர்ப்பணிப்போம்.



# தீயோனுக்கு எதிர்த்து நில்லுங்கள்

**2011**
**நவம்பர்**
**12**
**சனி**

காலை
எபே. 6:10–17

தி. வ.
எபே. 6 : 11
**"...தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்"**

மாலை
நீதி. 24:15–22

சிந்தனை
**கிறிஸ்தவ வாழ்வில் தீமைக்கு எதிரான போர் தவிர்க்க இயலா**

கி.பி. 8—ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஆரியரின் ஆதிக்கம் திருவிதாங்கூரில் மேலோங்கியபோது ஒடுக்கப்பட்ட இனத்து மக்களை கீழ்சாதி என முத்திரை குத்தினர். இக்கீழ்சாதி ஆண்களும் பெண்களும் மேலாடை அணியக்கூடாது. இவைகள் ஆட்சிபுரிவோர், அதிகாரம் செலுத்துவோர் இவர்களின் பண்பாட்டு ஆதிக்கம்.

கிறிஸ்தவ வாழ்வில் போராட்டம் என்பது தவிர்க்க இயலாது. உலக தீயோனுக்கு எதிர்த்து நிற்பதற்கு கடவுள் தருகின்ற எல்லா படைக்கலன்களையும் அணிந்து கொள்ளவேண்டும். குமரி மண்ணில் 1806—இல் கால்பதித்த றிங்கல்தௌபே ஐயர் அவர்கள் இந்த பண்பாட்டு ஆதிக்கத்தை எதிர்க்க முன்வந்தார். இவருடைய பரிந்துரையில் 1812—ல் கர்னர் மன்றோ கிறிஸ்தவ பெண்களுக்கு இந்த உரிமையை வழங்கி உத்தரவிட்டார்.

இருள் நிறைந்த தீயோனின் செயல்நிறைந்த இவ்வுலகில் கடவுள் தரும் ஆற்றலோடு தீயோனை எதிர்க்கவேண்டும். ஆண்டவர் இயேசு தமது காலத்தில் பாலஸ்தீனாவில் இருந்த பண்பாட்டு ஆதிக்கம், அதிகார ஆதிக்கம் தீய ஆவிகளின் போராட்டம் இவற்றை பிதாவின் விருப்பப்படி எதிர்த்தார்.

இன்றைய கால சூழ—ல் தீமைகள் கண்டு அடங்கி போகும் சூழல் பெருகி வருகிறது. "நமக்கு ஏன் இந்த வம்பு" எனும் எண்ணமே அதற்கு காரணம். தீமைக்கு எதிர்த்து நிற்போர் புறக்கணிக்கப்படும் காலம் இது. கிறிஸ்தவர் கிறிஸ்துவை போல தீமைகள் செய்யாமலும் தீமையை எதிர்த்து நிற்பவர்களுமாயிருக்க வேண்டும். லஞ்சம், ஊழல், சுயநலம் என பெருகிவரும் தீமைகள் நம்மைவிட்டு அகல தொடர்ந்து எதிர்த்து நிற்போம்.

# தொழுகையில் ஒன்றுபடுதல்

**2011**
**நவம்பர்**
**13**
**ஞாயிறு**
**ஐக்கிய ஞாயிறு**

காலை
எபே. 4:1–6

தி. வ.
எபே. 4 : 4
**"...ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு."**

மாலை
நீதி. 24:23–34

சிந்தனை
**ஒன்றுபடுத்துவதே தொழுகை.**

இறைவனோடு மனிதன் கொள்ளும் உறவுநிலை தொழுகை. இதன்வழியாக மனித இறை உறவு வலுவடைகிறது. மனித இறை உறவோடு மட்டும் நிற்பதல்ல தொழுகை மனிதன் சகமனிதனோடுள்ள உறவு இங்கு வ—யுறுத்தப்படுகிறது.

கிறிஸ்தவப் புதுவாழ்வில் நாமெல்லாரும் கிறிஸ்துவுக்குள் வாழ்வதெற்கென்று அழைக்கப்பட்டவர்கள். அழைக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் உட—ன் உறுப்புகளாய் இருக்கிறோம். நாம் ஒரே உட—ன் உறுப்புகள் என்பது ஒவ்வொரு தொழுகையிலும் வலுவடைகிறது. உட—ன் உறுப்புகளின் செயல்பாடுகள் வெவ்வேறானாலும் இதன் செயல்பாடுகள் முழு உடலையும் இயக்குகிறது. நாம் செயலாலும், திறமையாலும் வேறுபட்டாலும் நம்மால் முழு உடலாகிய கிறிஸ்து மகிமைப்படுகிறார்.

நானே திராட்சைச் செடி நீங்கள் கொடிகள் என்பதில் இவ்வுறவு வலுவடைகிறது. ஆண்டவர் இயேசு பிதாவை நோக்கி நாம் ஒன்றாயிருப்பதைப் போல இவர்களும் ஒன்றாயிருப்பார்களாக என்ற வேண்டுதல் இதையே வ—யுறுத்துகிறது.

தென்னிந்தியத் திருச்சபை (C.S.I.) வடஇந்தியத் திருச்சபை (CMI) மார்த்தோமா ஆகிய திருச்சபைகள் ஒன்றிணைந்து ஒரு பொதுவான திருச்சபை உருவாக எடுத்துகொண்ட முயற்சியை நினைத்து கடவுளை துதிக்கவும், அது விரைவில் நிறைவேற ஜெபிக்கவுமே இந்த நாளை ஐக்கிய ஞாயிறாக அனுசரிக்கிறோம். பல வேறுபாடுகள் இச்சபை பிரிவுகளில் உண்டு. தொழுகைகளிலும் உண்டு. வேறுபாடுகளை களைந்து தொழுகையில் தென்னிந்தியத் திருச்சபை எவ்வாறு உருவாக்கப்பட்டதோ அவ்வாறே இந்திய திருச்சபை உருவாக ஜெபிப்போம். ஒன்றிணைந்தால் கடவுளின் ஆளுகை விரையில் பரவும் என்பதையும் உணர்வோம்.



# ஆவியோடு தொழுதல்

**2011**
**நவம்பர்**
**14**
**திங்கள்**
**குழந்தைகள் தினம்**

காலை
யோ. 4:19–26

தி. வ.
யோவா. 4:24
**"...தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும்... அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்"**

மாலை
நீதி. 25:1–12

சிந்தனை
**உண்மையியல்பில் ஆண்டவரைத் தொழுவோம்.**

ஆழ்தியான நிலையதினில் சுகம் பொ—யும் —நம்
ஆண்டவரின் திருவடிகள் அருள்புரியும்
அமர்ந்தே அவர் இறைவன் என அறிவோம்—வெறும்
ஆவாத அலையில் அவர் அகப்படமாட்டார்
அமல்தென்றல் மெல்தொனியில் அவர் உள்ளார்—நம்
அகமுறைந்தே ஆண்டு செயல்படுகின்றார் —
என்கிறார் பக்தன். இப்பாட—ல் மனித உள்ளம் இறைவனைத் தேடும் நிலையே ஆழ்தியான நிலை என எடுத்துரைக்கப்படுகிறது. உடல் அசைவுகளினாலே உணர்ச்சிபூர்வமாக தொழுவது அல்ல. உள்ளத்தில் ஆண்டவரைத் தேடுவதே ஆவியோடு தொழுதல்.

இந்த உண்மைத்தொழுகையினால் மனிதரிடையே நாம் அனைவரும் கடவுளால் படைக்கப்பட்டவர்கள் என்ற எண்ணம் வ—மைபெறும். இதனால் மனுக்குலத்தில் உள்ள சாதிய வேறுபாடுகள், பொருளாதார ஏற்றதாழ்வுகள் போன்ற உயர்வு தாழ்வுகள் உடைக்கப்படும். மொழி, நாடு கலாச்சாரம் என்ற எல்கை கடந்த உறவு இத்தொழுகையால் ஏற்படும் பிரிவினைகள் என்பது முற்றிலுமாக ஒழிக்கப்படும். ஆண்டவர் இயேசு சமாரியா பெண்ணுடனான உரையாட—ல் இதையே வ—யுறுத்துகின்றார்.

குழந்தைகள் தினமான இன்று குழந்தைகளில் வெளிப்படும் களங்கமற்ற நிலை, உண்மைதன்மை, சுயநலமில்லாத தன்மை என அவர்களில் வெளிப்படும் நற்குணங்களும் நாமும் நம் தொழுகையில் தூய மனதுடன் கடவுளோடு இணைந்து தொழுதிட அழைக்கப்படுகிறோம். அல்லாவிடில் நமது தொழுகைகள் பொருளற்றதாகிவிடும். சுத்த இதயத்தோடு தொழுதுகொள்ளுவோம் (11 தீமோ. 2 : 22).

தொழுகையில் பகை, விரோதங்கள் பழிவாங்குதல் நம்மைவிட்டு அகன்று பிறரை ஏற்றுக் கொள்ளும் மனநிலையை தூய ஆவியர் நமக்கு தரட்டும்.

**2011**
**நவம்பர்**
**15**
**செவ்வாய்**

காலை
சங். 96

தி. வ.
சங். 96 : 9
**“பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்”**

மாலை
1கொரி. 3:1–9

சிந்தனை
**வாழ்வில் தூய்மை இறைவனை காணச்செய்யும்.**

# தூய்மையுடன் தொழுதல்

தொழுகை என்பது வேறு, வாழ்க்கை என்பது வேறு என வழக்கமாக நினைக்கிறோமே அது தவறு அன்றாடம் நாம் ஆற்றும் கடமைகளை அகற்றிவிட்டு தன்னந்தனியான தூய்மையான இடம் தேடி, பக்தி ததும்பும் எண்ணங்களால் நம் சிந்தனையை நிரப்பி, பழக்கமான ஜெபங்களை உதடுகளின் வழியாக உதிர்ப்பதே தொழுகை என்று கருதுவது உண்மைக்கு புறம்பானது.

தொழுகையை வாழ்க்கையாக்கிட
வாழ்க்கையை தொழுகையாக்கிட
வழி அறியாமல் துடிக்கின்றேன்
விழிகளில் நீர் பொழிய —என்று கூறுகிறான். இரட்சண்யதாசன் என்ற பக்தன்.

உறவுகள் இறுக வேண்டுமானால் உறுதியாக ஒருவர் மற்றவரை மதிக்க வேண்டும். மதிப்பு முதிர்ந்து வணக்கம் ஆகும். எதிரே இருப்பவர் தனித்தன்மை உடையவர் என்பதால், மதியால் புரிந்துகொள்ள முடியாத மறைபொருளானவர் என்பதால், அதிகமான வணக்கத்திற்கு உரியவர் ஆகிறார். இறைவனோடு நாம் கொள்ளும் உறவிலும் சிறப்பிடம் பெறுகின்றன மதிப்பும் வணக்கமும் எரிகின்ற முட்புதரை மோசே நெருங்கியபோது உன்கால்களில் இருக்கிற பாதரட்சையை கழற்றிபோடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்ற கட்டளை அவர் காதில் கேட்டது யாத். 3 : 5. ஏசாயா தீர்க்கனும் இறை சமூகத்தின் முன் நின்றபோது இதயம் அஞ்சி அசுத்த உதடுகளுள்ள மனுஷன் நான் என்று திருமறை கூறுகிறது. ஏசா. 65.

தொழுகையிடம் விளையாடுமிடமல்ல. நமது ஆசைகளை நிறைவு செய்யுமிடமுமல்ல, மாறாக கடவுளின் சத்தத்தை கேட்குமிடம். நாம் நமது எண்ணங்களை பேசுமிடமல்ல. இறையரசின் பணிகளை திட்டமிடுமிடம். எனவே தொழுகையிடத்தை தொழவேண்டியவரை பயபக்தியாய் கருதாதது வரை தொழுகை பயனற்றதாகவே இருக்கும்.

முறையான தொழுகையை விருப்பத்தோடு செய்தால் மதிப்பு, வணக்கம், அச்சம் நம் மனத்திலும் முளையிடும்.



**2011**
**நவம்பர்**
**16**
**புதன்**

காலை
அப். 12:1–19

தி. வ.
அப். 12 : 5
**“சபையார்... தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள்”**

மாலை
செப். 3:1–9

சிந்தனை
**இசைந்து தொழுதால் இறைபிரசன்னம் காணலாம்.**

# இசைந்து தொழுங்கள்

லூத்தர்ரைஸ் கிறிஸ்தவ இயக்கங்களை இணைக்கும் முக்கியமான பாலமாக விளங்கினார் இவர். இவருக்கு சொந்தமான வீடு கிடையாது. திருமணம் செய்து கொள்ளவில்லை சுவிசேஷ சுற்று பயணங்களிலேயே தன் காலங்களை செலவிட்டார். சிதறிகிடக்கும் திருச்சபைகளை ஒன்றிணைக்க சிறந்த சிந்தனைகளை எழுதினார்.

இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். இயேசுகிறிஸ்து (மத். 18 —20) இசைந்த கூடுகை இயேசுகிறிஸ்துவின் பெயரில் அமைந்தால் இறைபிரசன்னத்தை உணரமுடியும் என்கிறார். தொழுகையில் இசைந்து செயல்படுவதையே திருச்சபை தொழுகைகள் வி—யுறுத்துகின்றன.

தொடக்ககால சபையார் அப்போஸ்தலர் பேதுரு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டபோது இசைந்து ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள். விடுதலை பேதுருவுக்கு கிடைத்தது. சபையாருடைய இசைந்த வாழ்க்கை, ஜெபம் ஆண்டவருடைய விடுதலை வாழ்வை பெற்றுக்கொள்ள உதவியது.

ஆண்டவர் இயேசு சீடராகிய பேதுருவிடம் ஒரு மணிநேரமாவது விழித்திருந்து ஜெபிக்ககூடாதோ என்று கேள்வி எழுப்பியது இங்கு குறிப்பிடதக்கது. சீடர்கள் தம்முடன் இசைந்து ஜெபிப்பதை ஆண்டவர் இயேசு விரும்பினார்.

பிரிவினை மனநிலையுடன் தொழுகைகள் தொழுகை முடிந்தபின் என்ன குறைகண்டு சண்டை போடலாம், சின்ன பிரட்சனைகளுக்காய் தொழுகையே வேண்டாம் என தொழுகையை நிறுத்திடும் மனநிலை இன்று. பல மனதுகளுடன் தொழுகை செய்வதில் பலன் இல்லை ஒரே மனதுடன் தொழுவோம். கடவுள் அங்கே வருவார்.

## பகையை மறந்து தொழுங்கள்

**2011**
**நவம்பர்**
**17**
**வியாழன்**

காலை
மத். 5:22–26

தி. வ.
மத். 5 : 24
**“. . . உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து”**

மாலை
ஆதி. 33:1–12

சிந்தனை
**பகை மறந்த தொழுகை இறை உறவை வலுப்படுத்தும்.**

மரியான் உபதேசியார் அவர்கள் எழுதிய கர்த்தரின் பந்தியில் வா, சகோதரா கர்த்தரின் பந்தியில் வா என்ற பாட—ல் ஆபே—ன் ரத்தம் அல்ல நீ செய்த அநியாயத்தைச் சொல்ல சாபம் எல்லாம் வெல்ல —சிந்துண்ட தயையை நான் என்ன சொல்ல? கோபம் இல்லாமல் உன் மா பாவம் தீர்த்திடக் கூறிப் பிதாவின் முன் ஏறின ரத்தமே— என்ற வரிகள் பகையை மறந்து தொழுகை செய்யவும் ஆண்டவர் நம்மை தண்டிப்பவரல்ல என்ற பகை மறந்த இறைத்தன்மையையும் நமக்கு விவரிக்கின்றன.

நமக்கும் கடவுளுக்கும் இடையே பகையாக எழுந்து நின்ற பிரிவினை சுவராகிய நம்முடைய பாவத்தை தமது ரத்தத்தால் கழுவி பிரிவினைச்சுவரை தகர்த்தெறிந்த நமது ஆண்டவர் இயேசு சகோதர ஒப்புரவை வ—யுறுத்துகின்றார்.

ஒருவர் தொழுகைக்கு வந்து காணிக்கை செலுத்த முன் வரும்போது அந்த காணிக்கை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றால் சகோதரனோடு ஒப்புரவு அவசியம். ஆண்டவர் இயேசு தம்மை சிலுவையில் அறைந்த மக்களை மன்னிக்கும்படி தந்தையாம் கடவுளிடம் வேண்டிக்கொண்டது சிறந்த முன் மாதிரி.

பகையோடு கடவுளை தொழுவது கடவுளின் பார்வையில் ஏற்றுக்கொள்ள இயலாதது. அதிலும் “சகோதரனை” பகைத்துக் கொண்டு கடவுளை தொழுவது அர்த்தமற்ற தொழுகையாகவே இருக்கும். மனித உறவுகள் பிரிந்து நிற்கும்போது இறையுறவு பெற மன்றாடுவதும், தொழுகையில் பங்குபெறுவதும் வீணானதே! எனவே உடன் வாழ்பவரோடு இருக்கும் பகை, கசப்பு, கோபம்... என்று தொடரும் பகைகளை நம்மைவிட்டு அகற்றி, உண்மை கடவுளைத் தொழுவோம்.



## நம்பிக்கையுடன் இறைபணி செய்யுங்கள்

**2011**
**நவம்பர்**
**18**
**வெள்ளி**

காலை
மாற். 2:1–12

தி. வ.
மாற். 2 : 3
**“அப்பொழுது நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்துகொண்டு அவரிடத்தில் வந்தார்கள்;”**

மாலை
நீதி. 28:11–16

சிந்தனை
**பிறருக்கு விடுதலை வாழ்வை தருவதே இறைப்பணி**

C.M.S. அம்மா என்று அழைக்கப்படும் இன்கிரிட் கவுஸ்கி “அவனவன் தனக்கானவைகளை அல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக கிறிஸ்து இயேசுவிலுள்ள சிந்தையே உங்களிலும் இருக்க கடவது’’ என்பதற்கிணங்க வாழ்ந்து காட்டியவர்கள். ஏழைகளின் தாயாராக, எளியவர்களின் நண்பராக தன்னையே தியாகமாக்கினார். சமுதாயத்தில் ஆதரவற்று அடைக்கலமில்லாமல், உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி, வாழவழி தெரியாமல் தவித்து ஏழைச்சிறுவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த C.M.S.—ன் முதுகெலும்பாய் திகழ்ந்தவர் இவர். இவர்களது இறைப்பணி இறை நம்பிக்கையை நமக்குள் வலுவடையச் செய்கிறது.

திமிர்வாதக்காரனை சுமந்து கொண்டு ஆண்டவரிடம் வந்த நால்வருடைய நம்பிக்கை இறைப்பணி செய்ய அவர்களைத் தூண்டியது. திமிர்வாதக்காரன் விடுதலை பெற்றான். நமது நம்பிக்கை இறைப்பணி செய்ய நம்மை தூண்டவேண்டும். பவுலடியார் நம்மை ஆசாரியக்கூட்டம் என்கிறார். ஒவ்வொரு தனி மனிதனும் கடவுளின் திருப்பணியைச் செய்ய அழைக்கப்பட்டவர்கள்.

பிறரது இயலாமையில் அவர்களது இயலாமையை புரிந்து அவர்களுக்கு உதவி செய்யவே கடவுள் நம்மை அழைத்திருக்கிறார். அத்தகு பணிபுரிய எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றை முறியடித்து முன்னேறி இயலாதவர்க்கு மகிழ்வு தரவே கடவுளின் அழைப்பு நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஒருவராய் செய்ய இயலாவிடில், நான்கு பேராய், குடும்பமாய் திருச்சபையாய் இணைந்து செய்வோம். நாம் செய்யும் இறைப்பணி பிறர் விடுதலை வாழ்வை ஆண்டவரிடமிருந்து பெற்றுகொள்ள வழிநடத்த வேண்டும்.

# இணைந்து இறைப்பணி செய்யுங்கள்

**2011**
**நவம்பர்**
**19**
**சனி**

காலை
யாத். 36:1–8

தி. வ.
யாத். 36 : 1
**“திருப்பணிக்குக் கடுத்த சகல வேலைகளையும், ...அனைவரும் செய்யத் தொடங்கினார்கள்.”**

மாலை
அப். 16:11–15

சிந்தனை
**இறைப்பணி இணைந்து செய்திடல் இறையன்பு வேகமாய் மற்றவர்க்கு செல்லும்.**

1658—ல் இத்தா—யாவில் Cermona என்ற பட்டணத்தில் Anfanao என்ற சிறுவன் வசித்து வந்தான். ஒருமுறை அவன் வழியோரத்தில் அமர்ந்து இருக்கையில் Nicolomati என்ற இத்தா—யாவின் தலைசிறந்த Violin உருவாக்குகின்றவரைக் கண்டு மறுநாள் அவர் வீட்டிற்குச் சென்று எனக்கு பாடத்தெரியாது Violin இசைக்க தெரியாது ஆனால் Violin வடிவமைப்பேன் என்னை உங்களுடைய உதவியாளராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டான். Nicolo இதற்கு ஒப்புக்கொண்டார். Nicolo—வின் மறைவிற்குப் பிற்பாடு Antonic Stradiviari உலகின் தலைசிறந்த Violin உற்பத்தியாளராக மாறினார். நாம் அனைவருக்குள்ளும் திறமைகள் பல உறங்கிக் கிடக்கின்றன அவற்றை செயல்வடிவில் கொண்டு வருகின்றபோது சமுதாயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

யாத். 36 : 1—ல் பெசலெயேலும், அகோ—யாவும் கர்த்தர் கற்பித்தபடி திருப்பணிக்கு அடுத்த சகல வேலைகளையும் சிறப்பாக செய்தார்கள். இறைமக்களாகிய நாம் இறைவன் நமக்கு தந்திருக்கின்ற தாலந்துகளை ஆக்கத்துக்காக பயன்படுத்த வேண்டும். யாத். 35 : 30—31—ன் படி கர்த்தர் யூதாவின் கோத்திரத்தில் ஊரின் மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்— அழைத்து பொன்னிலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும் விசித்திரமான பணிகளை செய்ய நியமிக்கப்பட்டார். அகோ—யாப் சகல சித்திர வேலைகளையும் வினோதமான நெசவு வேலைகளையும் செய்யும்படி நியமிக்கப்பட்டார். ஒருவரின் திறமை என்பது அல்ல. இன்னொருவரின் அல்லது பலரின் திறமைகள் இணைந்ததின் விளைவே அழகான பரிசுத்த ஸ்தலம். இணைந்து பணிபுரிதல் இன்னொருவரின் சுமையை லகுவாக்குகிறது. திருப்பணி செய்யும்போது குறிப்பிட்டவர்களின் பணி என எதையும் நினைக்காது அனைவரும் இணைந்தே பணிபுரிவோம். நாமும் கடவுள் நமக்கு தந்திருக்கின்ற திறமைகளை பயன்படுத்துகின்றபோது அது திருச்சபைக்கும், சமுதாயத்துக்கும் பயனுள்ள நிலையில் அமைகின்றது.



# எதிர்காலத்தை உறுதிப்படுத்துதல்

**2011**
**நவம்பர்**
**20**
**ஞாயிறு**
**பெண் குழந்தைகள் ஞாயிறு**

காலை
மத். 15:21–28

தி. வ.
மத். 15 : 28
**“. . . உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது”**

மாலை
1இரா. 5:1–14

சிந்தனை
**பெண் குழந்தைகளும் நம் குழந்தைகளே.**

பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவதில் தாயின் பங்கு மிக முக்கியமானது. ஆபிரகாமின் பணிப்பெண் ஆகார், தன் மகன் இஸ்மவேலுக்காக வனாந்தரத்திலே அழுகின்றாள். மோசேயின் தாய் மோசேக்காக ஒரு நாணற்பெட்டியைச் செய்து அவனை காப்பாற்றுகின்றாள். இயேசுவின் தாய் மரியாள் இயேசுவை ஈன்றெடுப்பதற்காக இடம் தேடி அலைகின்றாள். இங்கு ஒரு தாய் பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்ட தன் மகளுக்காக இயேசுவிடம் மன்றாடுகிறாள். இயேசு அவள் விசுவாசத்தைக் கண்டு அந்த பிள்ளையைச் சுகப்படுத்துகின்றார். அவள் ஒரு கானானியப் பெண்ணாயிருந்தும் இயேசுவிடம் விடாய்ப்பிடியாய் தன் மகளுக்காக கெஞ்சினபடியால் சுகத்தைப் பெற்றுக்கொண்டாள்.

தடைகளை தாண்டி விடாமுயற்சியுடன் முயற்சிக்கின்றபோது வெற்றியை நாம் பெற்றுக்கொள்கிறோம்.

கர்நாடக மாநிலம் உடுப்பியின் மிகச்சிறிய கிராமத்தைச் சேர்ந்தவர் அஸ்வினி, கூ—த்தொழிலாளியின் மகளாகப் பிறந்தாலும் எப்படியாவது சாதித்து பெற்றோரைக் காப்பாற்ற வேண்டும் என்கிற ஆர்வம் மட்டும் குறையாமல் இருந்தது. பள்ளிக்காலம் தொடங்கி விடாமுயற்சியோடு பயிற்சியில் ஈடுபடுவாராம். அவர் படித்த பள்ளியில் தடகளம் இல்லை என்பதால் சோர்ந்து போகவில்லை. பக்கத்தி—ருந்த இன்னொரு பள்ளியின் உடற்கல்வி ஆசிரியரிடம் இவரே நேரடியாகச் சென்று “சார்! எனக்குதடகளம் கத்துக்குடுங்க” என்று அவராகவே கேட்டு விடா முயற்சியோடு பயிற்சி பெற்று நடந்து முடிந்த ஆசிய விளையாட்டு போட்டிகளில் இரண்டு தங்கப்பதக்கங்கள் பெற்று வெற்றியோடு திரும்பினார். அஸ்வினி இது அவளுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி. இயேசுவிடம் தன் மகளுக்காக விடாமுயற்சியோடு போராடின பெண்மணியைப் போல பெண் குழந்தைகள் வாழ்வுபெற அவர்களை அழிக்காது ஏற்றுக் கொள்வோம்.

# கடவுளின் கரம் பற்றுவோம்

**2011**
**நவம்பர்**
**21**
**திங்கள்**

காலை
எஸ்றா 7:24–27

தி. வ.
எஸ்றா 7 : 27
**“...எனக்கு தயவு கிடைக்கப்பண்ணின ...கர்த்தருக்கு ஸ்தோத்திரம்”**

மாலை
அப். 27:39–44

சிந்தனை
**எல்லாம் எனக்கு கடவுளே! அவர் கரம் என்னை நடத்தும்**

எஸ்றா பாபிலோனி—ருந்து எருசலேமுக்கு திரும்பி வருகின்றபோது பாவத்துக்கு அடிமையாகி இருந்ததை உணர்ந்தார். இந்நிலையில் எஸ்றா “கர்த்தருடைய வேதத்தை ஆராயவும் அதன்படி செய்யவும் இஸ்ரவே—லே நீதி நியாயங்களை உபதேசிக்கவும் தன் இருதயத்தை பக்குவபடுத்திக் கொண்டார். இறைபலத்தைக் கொண்டு இஸ்ரவேல் மக்களை சீராக்கும் பணியை செய்தான்.

ரோமர் 10 : 9—ன் படி “கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரி—ருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கபடுவாய் என்று பார்க்கிறோம்.

புனித ஜாண்வியானி என்பவர் ஜெபத்தின் வல்லமையைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார். கடவுள் உலகை ஆளுகிறார். ஆனால் ஜெபிக்க தெரிந்த மனிதரோ கடவுளை ஆளுகிறார். கடவுள் முடியாது என்று சொன்ன போதிலும் ஜெபிக்க தெரிந்த மனிதர் கடவுளை “முடியும்” என்று சொல்ல வைக்கிறார். ஜெபிக்க தெரிந்த மனிதர் கடவுளை ஆளுகிறார் என்று புனித ஜாண்வியானி கூறியது உண்மை என்று கானாவூர் திருமணத்தில் நாம் காண்கிறோம்.

மரியாள் இயேசுகிறிஸ்துவிடம் திராட்சைரசம் தீர்ந்தது என்று கூறியபோது தண்ணீர் திராட்சரசம் ஆகிறது. கடவுளின் பலத்த கரத்துக்குள் நாம் அடங்கியிருக்க அழைக்கப்படுகிறோம். நாமாகவே நடக்க துணியாமல், என்னால் எல்லாம் இயலும் என நினைக்காமல் கடவுளே எல்லாம் என நம்மை அவரிடம் தருவதே மேலானது. கடவுள் பெலன் தருகிறார் என நினைத்து செயல்படும் அனைத்தும் வெற்றியாகவே அமையும். நாமும் ஆண்டவரின் கரம் பற்றி நடக்கின்றபோது அவர் நம் தேவைகளை சந்தித்து நம்மை ஆட்கொண்டு நடத்துகிறார்.



# உயர்த்தும் உன்னதர்

**2011**
**நவம்பர்**
**22**
**செவ்வாய்**

காலை
2சாமு.22:21–36

தி. வ.
2சாமு. 22:34
**“...என் உயர் தலங்களில் என்னை நிறுத்துகிறார்.”**

மாலை
எபே. 2:1–10

சிந்தனை
**கடவுளுக்கு உண்மையாய் இருப்போர் உயர்வு பெறுவர்.**

*2சாமு. 22—ம்* அதிகாரம் தாவீதினுடைய நன்றி பாடலாய் அமைந்துள்ளது. வசனங்கள் *33—51*—வரை தாவீது சத்துருக்களை மேற்கொண்ட வெற்றிக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறார். கடவுள் தாவீதுக்கு தேவையான ஞானத்தையும் பெலனையும் கொடுத்தபடியால் தாவீது “என் கால்களை மான்கால்களுடைய கால்களை போலாக்கி என்னை உயர்ஸ்தலங்களில் நிறுத்தினார்”. என்று கூறுகிறார். கடவுள் பலத்தை தருகிறவர், ஆற்றலை தருகிறவர், தைரியத்தை தருகிறவர்.

*2சாமு. 22:33*—ல் “தேவன் எனக்கு பலத்த அரணானவர்” என்று தாவீது அறிக்கை செய்கிறார்.

1. கடவுள் நம்மை பாதுகாக்கிறவர் *(2சாமு. 22:2—20)*
2. கடவுள் வெளிச்சமானவர் *(2சாமு. 22 : 21—31)*
3. கடவுள் ஆற்றல்மிக்கவர் *(2 சாமு. 22 : 32—49)*
4. கடவுள் நம்பிக்கைக்குரியவர் *(2சாமு. 22:50—51)*

அமெரிக்காவில் வெள்ளை நிற குழந்தைகள், சிவப்பு நிற, பச்சைநிற, ஊதா நிறமான பலூன்களை வைத்து விளையாடிக்கொண்டிருந்தனர். இதைப் பார்த்துக் கொண்டிருந்த கறுப்பு நிற நீக்ரோ குழந்தைகள் வெள்ளை நிற குழந்தைகளைப் பார்த்து “கறுப்பு நிற பலூன்கள் மேலே பறக்குமா?” என்று கேட்டனர். அதற்கு வெள்ளை நிற குழந்தைகள் கூறினர் “நிச்சயமாகப் பறக்கும்; ஏனெனில் பறப்பது வெள்ளைநிறமோ, பச்சை நிறமோ, கறுப்பு நிறமோ இல்லை; மாறாக பலூன்களில் உள்ள காற்றுதான் பலூன்களை உயர பறக்கச் செய்கின்றது” இவ்வாறாக இறைவனை பற்றுறுதியாகக் கொண்டு நாம் எதைச் செய்தாலும் அவர் நம்மை உயர்வின் வழிகளில் நடத்துகிறார். கர்த்தர் நம்மை கன்மலைகளின் மீது கால்களை நிறுத்தி உன்னதங்களில் உட்காரச் செய்கின்றவர் அவர் நம்மை காப்பாற்றி வழிநடத்துவார்.

உயர்வு என்பது வெளிப்படையான ஆசீர்வாதம் மட்டுமல்ல, நிறைவுள்ள அங்கீகரிக்கப்பட்ட வாழ்வும் கூட. பகைவர்கள் அழிக்கப்பட்டார்கள் என்பதல்ல. பகை அழித்து ஒன்றாகி உயர்வு பெறுவோம். உயர் இடங்களில் அமர இறைவனிடம் நம்மை தாழ்த்துவோம்.

2011
நவம்பர்
23
புதன்

காலை
சங். 72:1–12

தி. வ.
சங். 72 : 12
**"கூப்பிடுகிற எளியவனையும் உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார்."**

மாலை
லூக். 18:35–43

சிந்தனை
**சிறுமையி–ருந்து பிறரை விடுவிக்க கடவுள் நம்மை உயர்த்தியுள்ளார்.**

# சிறுமையிலிருந்து விடுவிப்பவர்

72—ம் சங்கீதம் சாலோமோன் இராஜாவாய் அபிஷேகிக்கபட்டபோது சாலோமோனைக் குறித்து பாடப்பட்ட சங்கீதம் ஆகும். இச்சங்கீதத்தில் கடவுளுடைய நீதி, அவருடைய பாதுகாப்பு, அவர் தம் மக்களுக்கு வழங்குகின்ற ஆசி, இவைகளைக் குறித்து வாசிக்கிறோம்.

கடவுள் நீதி செய்வது போல, உதவி செய்வது போல, சாலமோனின் பணி தொடர வேண்டும் என்பது இச்சங்கீதத்தின் கருப்பொருளாகும். அரசன் சாலோமோன் இவ்வாறாக கூறுகிறார். கூப்பிடுகிற எளியவனையும் உதவியற்ற சிறுமையானவனையும் விடுவிக்க வேண்டும் அதை விட மேலாக நீதியின் ஆரியனாய் வீற்றிருக்கும் ஆண்டவர் தம்மை நோக்கி கூப்பிடுகிற அனைவருக்கும் உதவுகின்றவராய் காணப்பட வேண்டும்.

கிறிஸ்து மக்களுக்கு வழங்கிய செய்தி விடுதலையின் செய்தி ஆகும். எளியவர்களுக்கு நற்செய்தி சொல்லவும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு உரிமை வாழ்வு வழங்கவும் அவர் உலகத்திற்கு வந்தார். கிறிஸ்து கொண்டு வந்த விடுதலை; வெறும் புற விடுதலை மட்டுமல்ல. கிறிஸ்துவின் அன்பு, தம்மையே பிறருக்காக கையளிக்கும் தியாகமிக்க அன்பு. அன்பின் உச்சகட்டம் உயிர்தியாகம் ஆகும்.

சில வேளையில் நம்முடைய அன்பு தன்னலம் மிக்கதாய் அமைகிறது. ஆனால் நாம் பிறரை நேசிக்கின்றவர்களாகவும் அடிமைப்பட்டவரை விடுதலை வாழ்வுக்கு நேராக நடத்துகிறவராகவும் வாழும்போது இவ்வுலகில் இறையரசை நிலைநாட்ட முடியும். வழியோரத்தில் அடிபட்டு குற்றுயிராய் கிடந்தவனை அவனுடைய காயத்தை போக்கவும் அவனுக்கு அன்பு காட்டவும் ஒரு நல்ல சமாரியனை ஏற்படுத்தினது போல நாம் தாழ்வில் கிடந்தாலும் நம்மை தூக்கி உயர்த்துவார். நாம் உயர்வி—ருந்து உயர்ந்தவர்கள் அல்ல. மாறாக தாழ்வின் தாழ்வி—ருந்து மிக உயரத்துக்கு உயர்த்தப்பட்டவர்கள். சிறுமைப்படுத்தப்பட்ட, அடிமைப்படுத்தப்பட்ட நம்மையே கடவுள் உயர்த்தியிருக்கும்போது நாமும் பிறரை சிறுமைப்படுத்தாமல், சிறுமைப்பட்டவர்களை உயர்த்துவோம்.





2011
நவம்பர்
24
வியாழன்

காலை
ஏசா. 30:9–18

தி. வ.
ஏசா. 30 : 18
**"...உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார்"**

மாலை
அப். 9:1–9

சிந்தனை
**தூரத்தி–ருந்த நம்மை அவர் தேடி வந்தார்.**

# காத்திருக்கும் கடவுள்

கடவுள் ஒருபோதும் தம்முடைய மக்களை ஆசீர்வதிப்பதற்கு மறந்து போவது கிடையாது. அவருடைய பிள்ளைகள் அவரைவிட்டு விலகி சென்றாலும் கர்த்தரோ கிருபையும் காருண்ணியமும் உள்ளவராய் காணப்படுகிறார். நீதி செய்கிற தேவன் எப்பொழுதும் தம்மை நோக்கி பார்க்கின்றவர்களுக்கு நன்மை செய்ய ஆயத்தமுள்ளவராய் காத்திருக்கிறார். கடவுள் தம் அடியவர்களுக்கு நம்பிக்கை உடையவராய் காணப்படுகிறார். அவருடைய பிள்ளைகள் வாழ்வில் தீமையைவிட்டு விலகி மனம் திரும்பி அவரண்டை வருகின்றபோது அவர்களை ஏற்றுகொள்கிறார். ஏசாயா 30—ம் அதிகாரத்தில் கடவுளுடைய பிள்ளைகள் கடவுளுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிகின்றபோது அது அவர்களுக்கு வெற்றியாகவும் ஆசீர்வாதமாகவும் அமைகின்றது என்று தெளிவுபட கூறுகிறார்.

ஏசாயா 30 : 18—ல் "ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார், கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்கு காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்"

நீதி செய்து தண்டிப்பதற்காக காத்திருக்கின்றவர் கடவுளல்ல. ஆனால் அவர் கிருபை உள்ளவர் பாவம் செய்து அவரை விட்டு தூரம் போகின்றபோது அவர் மனம் வருந்தினாலும் மனம் திரும்புகிறவர்களை ஏற்றுகொள்வதற்காய் காத்திருக்கிறார். ஏசாயா 40 : 31—ன் படி "கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.

தம் அடியவர்களை நேசிப்பதற்காகவும், உதவி செய்வதற்காகவும் காத்திருப்பவர் இறைவன் நாம் அவரை விட்டு தூரம் செல்லாமல் அவரை அண்டி நடப்போம்.

**2011**
**நவம்பர்**
**25**
**வெள்ளி**

காலை
சங். 145

தி. வ.
சங். 145 : 9

**"கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்."**

மாலை
அப். 3:1–11

சிந்தனை

**தயவு காட்டுவதினால் பிறரை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.**

# தயவுள்ளவர்

கடவுள் எல்லார்மேலும் தயவுள்ளவர். கர்த்தருடைய தயவினால் மட்டுமே நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் காக்கப்படுவதும், சுகமாக்கப்படுவதும் கர்த்தருடைய தயவினாலே, நாம் விடுதலை பெற்றுக்கொள்வதும் கர்த்தருடைய தயவினாலே. நாகூம் 1 : 7—ல் கர்த்தர் நல்லவர் என்றும் இக்கட்டுநாளிலே அரணான கோட்டை, தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார் என்று வாசிக்கிறோம். ரோமர் 11 : 22—ல் "ஆகையால் தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும் உன்னிடத்தில் தயவையும் காண்பித்தார், அந்த தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்கு தயவு கிடைக்கும். நிலைத்திராவிட்டால், நீ வெட்டுண்டு போவாய்.

இயேசு தயவுள்ளவர் என்பதை திருமறை மூலமாக நாம் அறிந்து கொள்கிறோம். பாவத்திலே வாழ்ந்து கொண்டிருந்த சமாரிய பெண்ணுக்கு தம்முடைய தயவினால் ஜீவதண்ணீரைக் கொடுத்து அவளுக்கு புதுவாழ்வு அளிக்கின்றார்.

38 ஆண்டு காலமாய் திமிர்வாதமாய் பெதஸ்தா குளத்தண்டையில் இருந்த மனிதனுக்கு தயை கூர்ந்த இயேசு அவனுக்கு சுகம் கொடுத்து நடக்க செய்கிறார்.

தெருவிலே நாற்றமெடுத்துக்கொண்டிருந்த மனிதர்கள் மீது அன்னைதெரசா தயவுகூர்ந்த படியினால் அப்பேர்பட்டவர்களுக்கு புத்துயிர் கொடுக்கும் பணியை அவர்கள் செய்தார்கள். நமது மீட்புக்காக இறைவன் தயை கூர்ந்தவராய் தம்முடைய ஒரே பேரான குமாரனை இவ்வுலகிலே அனுப்பி நம்மை மீட்டுக்கொண்டார். அடிமைத்தனத்திலே மாண்டு கொண்டிருந்த இஸ்ரவேல் மக்கள் மீது தயை கூர்ந்த இறைவன் மோசேயின் மூலமாக அவர்களை விடுதலைக்கு நேராக வழிநடத்தினார். கடவுள் நம்மை தேடி வருமளவு தயவுள்ளவர், அவருடைய தயவினால் நாம் வாழ்கிறோம். தயவு காட்ட நாம் அழைக்கப்படுகிறோம்.



**2011**
**நவம்பர்**
**26**
**சனி**

காலை
யாத். 19:1–6

தி. வ.
யாத். 19 : 4

**"...உங்களை என்னண்டையிலே சேர்த்துக் கொண்டதையும் நீங்கள் கண்டிருக்கிறீர்கள்"**

மாலை
அப். 9:36–43

சிந்தனை

**கடவுள் நம்மை அரவணைத்து காப்பவர்.**

# அரவணைப்பவர்

யாத். 19 : 4—ன் படி கடவுள் இஸ்ரவேல் மக்களை கழுகு தன் குஞ்சுகளை செட்டைகளின் மேல் சுமந்து கொண்டு வருவதுபோல் தம்மையும் பத்திரமாய் வழிநடத்தினார் என்று அறிகிறோம். கழுகு உயரமான இடங்களிலோ, மரங்களிலோ தன்னுடைய கூட்டை கட்டுகிறது. கூட்டை கட்டுவதற்காக கவனத்தோடு செயல்படுகிறது. தன்னுடைய கூட்டிலே இருக்கின்ற குஞ்சுகளை மிக கவனத்தோடு பாதுகாக்கின்றது. கூட்டிலே குஞ்சுகள் வசதியாய் இருக்கும்படியாய் பூமியி—ருந்து கிடைக்கும் பஞ்சு போன்ற பசுமையான பொருட்களால் கூட்டை பக்குவப்படுத்துகின்றது. அத்தனை வசதிகளை கழுகு தன் குஞ்சுகளுக்காய் செய்கின்றது. பிற விலங்குகள் குஞ்சுகளை துன்பப்படுத்தாதபடி அவைகளை பத்திரமாய் கவனித்துக்கொள்கிறது. கடவுளும் இவ்வாறாக தம்முடையவர்களை அரவணைத்து காப்பவர்.

இஸ்ரவேல் மக்கள் எகிப்திலே இருந்தபோது அவர்களை விடுதலைக்கு நேராக நடத்தினார். வனாந்தரத்திலே கானானுக்கு நேராக அவர்கள் பிரயாணம் செய்கையில் ஷெக்கேனாவின் மகிமையினால் அவர்களை ஆட்கொண்டு நடத்தினார். வனாந்தரத்தில் அவர்களுக்கு எது தேவையோ அவைகளைக் கொடுத்து அவர்களை போஷித்தார். செங்கடல் முன் பார்வோனும் அவன் சேனைகளும் சூழ்ந்தபோது அவர்கள் இஸ்ரவேலரை அழித்து போடாதபடி கர்த்தர் உதவி செய்தார். ஒரு சாதாரண கழுகு தன் குஞ்சுகளை அரவணைப்பதற்கு மேலாக கர்த்தர் தாமே தம் மக்களை காத்து பராமரித்து வழிநடத்துகின்றார்.

கடவுள் நம்மை அரவணைத்து வருவதை நாம் தினமும் அனுபவித்து வருகிறோம். ஒவ்வொரு பொழுதும் பாதுகாவல் இல்லை என உணரும்போது, பயத்தில் முடங்கும்போது இஸ்ரவேலரை அரவணைத்து முன்னேற உடன் இருந்த கடவுள் நம்மையும் முடங்கி விடாது முன்னேற உதவுவார் என நம்பிக்கை கொள்வோம்.

2011
நவம்பர்
27
ஞாயிறு
வருகையின் ஞாயிறு

காலை
வெளி 22:10–21

தி. வ.
வெளி 22 : 20
**“ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.”**

மாலை
ஏசா. 40:1–5

சிந்தனை
**இரண்டாம் வருகையை யாராலும் தடுத்திட இயலாது.**



# மகிழ்வின் எதிர்நோக்கு

*2011*—ம் ஆண்டு முடிவுக்கு வரும் சூழ—ல் நாம் கிறிஸ்துவின் வருகையைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். அதற்காக காத்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக நாம் வாழ்கின்ற சூழல் நம்பிக்கையற்ற நிலையை வெளிப்படுத்துவதாக உள்ளது. அடுத்தது எவ்விதமான அழிவு நேரிடும் என்று தெரியாத நிலையில் உள்ளோம் இது இயற்கை சீற்றமாகவோ, மனிதர்களின் செயல்பாட்டினாலோ இருக்கலாம். இந்த வருகையின் காலத்தில் கடவுளின் வார்த்தை நமக்கு நம்பிக்கை தருவதாகவும் மகிழ்ச்சி தருவதாகவும் உள்ளது.

ஓரிடத்தில் பவுல் அரமேய மொழியில் “மாரநாதா” என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கு பொருள் “கர்த்தராகிய இயேசுவே வாரும்” (1கொரி. 16 : 22) கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கும் நிலையில் நாம் ஆயத்தமுள்ளவர்களாய் காணப்படவேண்டும். விழிப்புடன் செயல்படும் கிறிஸ்தவர்களாக வாழ வேண்டும்.

மத். 24 : 42—ல் “உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிற படியால் விழித்திருங்கள்” என்று வாசிக்கிறோம்.

விழிப்புடன் நாம் செயல்படுவோம். தீய வழிகளை விட்டு. தீய சிந்தனைகளை களைந்து என்னில் கிறிஸ்து வாசம் செய்ய வேண்டும். என்ற சிந்தையோடு நாம் வாழ்கின்றபோது கிறிஸ்து நம்மில் வாசம் செய்து நம்மை மகிழ்விக்கின்றார்.

அவர் எப்போது வருவார் என நினைத்து கொண்டிருக்காது. அவர் வரும்போது நான் ஆயத்தம் எனச் சொல்லுவோம். உலகிற்கு ஒத்து போகாமல், தீமை செய்வதை விட்டு நன்மை செய்து, அவர் வருகை நிச்சயம் என்பதை உணர்ந்து நம்மை ஆயத்தப்படுத்துவோம்.



2011
நவம்பர்
28
திங்கள்

காலை
சங். 68:1–20

தி. வ.
சங். 68 : 4
**“...வனாந்தரங்களில் ஏறிவருகிறவருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள்”**

மாலை
1தெச. 3:1–13

சிந்தனை
**நமது உள்ளங்கள் மட்டுமன்று பிறர் உள்ளங்களுக்கும் நற்செய்தி ஊடுருவட்டும்.**



# வழியை ஆயத்தப்படுத்துங்கள்

பள்ளங்கள் எப்போதுமே
பள்ளங்களாகவே இருப்பதில்லை
மேடுகளை
மேன்மைமிகு ஏற்றங்களை
உருவாக்கும் போக்கில் தான்
பள்ளங்கள் பள்ளங்களாக அமைகின்றன.

மேடுகளை மேடுகளாக்க இயேசு இந்த உலகில் வரவில்லை பள்ளங்களை மேடுகளாக்கவே இயேசு இந்த உலகில் வந்தார்.

மனித வாழ்வில் பலசூழ—ல் ஆயத்தங்கள் இருந்தாலும் வழியை ஆயத்தப்படுத்துதல் என்பது எல்லாச் சூழலுக்கும் பொருத்தமானது. சரியில்லாத பாதைகள், கரடுமுரடான பாதைகள் தலைவர்களது பயணங்களுக்கு இடையூறாக அமையும் எனவே தலைவர்கள் வருகையில் முதல் ஆயத்தமாக வழிகளே அதிகம் ஆயத்தப்படுத்தப்படுகின்றது. கடவுளின் உலக வருகை குறித்து இறைவாக்கினர்கள் பல முன் ஆயத்தங்களை கூறினாலும் சங்கிதக்காரர் தாவீதும் தன் பாட—ல் மேசியாவிற்கான ஆயத்தங்களை குறிப்பிடுகின்றார்.

எப்படிப்பட்ட வழிகள் ஆயத்தமாக வேண்டும்
திக்கற்ற பிள்ளைகளுக்கு தந்தையாக
விதவைகளுக்கு நியாயம் செய்பவராக
தனிப்பட்டவர்களுக்கு வீடுவாசலாக
கட்டுண்டவர்களுக்கு விடுதலையாக இருக்கக் கூடிய வழிகளே ஆயத்தப்படுத்தப்பட வேண்டும்.

கடவுள் பல கட்டளைகளை ஆன்மீக வாழ்வுக்கும், சமூக வாழ்வுக்கும் வழிகளாக கொடுத்தார். ஆனால் இந்த வழிகள் பல மனிதனது சுயநலத்தால் அடைப்பட்டுப் போனது. அடைப்பட்ட வழிகளால் கடவுளிடம் வருவதற்கு பெரும் தடை ஏற்பட்டது. எனவே மனிதன் கடவுளை சந்திக்க வேண்டுமானால் கடவுள் மனிதனை சந்திக்க வேண்டுமென்றால் அடைபட்ட வழிகள் புதுப்பிக்கப்பட வேண்டும். இன்னொருமுறை வாழ்வின் எண்ணங்களை புதுப்பிப்பதும், ஆன்மீக பயணத்தில் இன்னும் தடையாயிருப்பவற்றை மாற்றி ஆயத்தப்படுத்துவதும் கிறிஸ்துவோடு இணைந்த பயணத்திற்கு வழிவகுக்கும்.

**2011**
**நவம்பர்**
**29**
**செவ்வாய்**
**வட இந்தியத் திருச்சபை நாள்**

காலை
லூக். 1:39–45

தி. வ.
லூக். 1 : 45
**“விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்”**

மாலை
1சாமு. 1:9–20

சிந்தனை
**விசுவாசிப்பவரே இறைதிட்டத்தை செயல்படுத்த முடியும்.**



# நிறைவேறும்

மைக்கேல் ஏஞ்சலோ ஒரு நாள் கடைக்கு முன்னால் கவனிப்பாரற்றிருந்த அழுக்குபடிந்த கல்லை கடைக்காரரிடம் விலைக்கு கேட்டார். கடைக்காரரரோ “நீங்கள் இதற்குப் பணம் தரவேண்டாம் இந்தக் கல்லை முத—ல் இங்கிருந்து எடுத்துச் சென்றால் போதும் என்றார். ஒரு ஆண்டு கழித்து மைக்கேல் ஏஞ்சலோ கடைக்காரரை தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்று ஒரு சிலையைக் காட்டினார். ஆச்சரியமடைந்தார். கடைக்காரர் அந்த அழுக்குக் கல்லா இது என்றார். அந்த அழுக்குக்கல் தான் இது. அதைப் பார்த்தபோது இந்த சிலையி—ருக்கும் மரியாளும், இயேசுவும் என்னிடம் நாங்கள் நீண்ட நாட்களாக இந்த கல்லுக்குள் அடைபட்டிருக்கிறோம் எங்களை வெளியே கொண்டுவாயேன்” என்று சொல்வது போ—ருந்தது. நான் அவர்களைச் சுற்றியிருந்த வேண்டாத பகுதிகளை நீக்கினேன் அவர்கள் வெளிப்பட்டிருக்கிறார்கள் என்றார்.

கடவுளின் திட்டம் உதவாதவர்கள் புறக்கணிக்கப்பட்டவர்கள், அழுக்கடைந்தோராலும் கூட நிறைவேறும். ஒன்றுமறியாத மரியாள் கன்னிகையான மரியாள் தனக்குள் மேசியா இயேசு பிறப்பார் என்பதை அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் இறைவனது திட்டங்கள் ஒவ்வொரு மனிதனது இயலாமைக்குள்ளும் புதைந்து இருக்கின்றது. இறைதிட்டங்கள் காலம் வரும்போது நிறைவேறிட தன்னை அர்ப்பணிக்க வேண்டும்.

மரியாள் சந்திக்க இருக்கின்ற அவமானங்கள் அனைத்தையும் அறிந்தும் இறைவனது திட்டம் நிறைவேற தன்னை ஆண்டவருக்கு அடிமையாக அர்ப்பணித்தாள். கணவனை அறியாதிருக்கிறேன் பின் எப்படி இயேசு எனது வயிற்றில் கருவாக முடியும் என்ற கேள்விகள் மரியாளது உள்ளத்திலே எழுந்திடினும் தூய ஆவியரில் செயலாற்றுதல் தன் மூலம் நிறைவேற, இறைமகன் பிறக்க இடமளித்தார். மரியாளின் ஒன்றுமில்லை என்ற வெறுமை நிலையை மாற்றுகின்றவர் கடவுள். எனவே இறைதிட்டம் எது என்பதை உணர்ந்து கொண்டு அவை தன் மூலம் தன் தலைமுறையில் நிறைவேற நம்மை ஒப்படைக்க வேண்டும்.



**2011**
**நவம்பர்**
**30**
**புதன்**

காலை
ஏசா. 11:1–9

தி. வ.
ஏசா. 11 : 5
**“நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும்.”**

மாலை
ரோ. 9:27–33

சிந்தனை
**வாழ்விலும் மாற்றம் உண்டாவதே மேசியாவின் ஆளுகையின் சிறப்பு.**



# நீதி செய்பவர் வருகிறார்

ஒரே நாடு வாக்குதத்தம் பண்ணின நாடு, தூய நாடு கடவுள் கொடுத்த நாடு என்ற பல சிறப்புக்களை கொண்ட இஸ்ரவேல் நாடு கி.மு. 922—ம் ஆண்டு வடநாடு, தென்நாடு என இரண்டாகப் பிரிந்தது. அரசர்களின் ஆட்சி அநீதி நிறைந்ததாய் அமைந்தது. நீதி எட்டாத கனியாய் இருந்தது. ஆகவே தாவீது காலத்தில் இருந்த ஆட்சி முறை மக்களால் பெரிதும் போற்றப்பட்டது. உலக ஆட்சி தோற்றுப்போன சூழ—ல் நீதி ஆட்சி தரும்படி மேசியா வரப்போகின்றார் என்ற எண்ணம் உருவானது.

பட்டுப்போன மரம் காய்ந்து போனமரம் துளிர்தோன்ற முடியுமா? முடியாதல்லவா? தாவீதின் ஆளுகை பட்டுப்போனது மறுபடியும் துளிர்விட முடியாது என்ற எண்ணம் மக்களுக்குள் இருந்தபோது ஏசாயா ஈசாயின் அடிமரம் ஒரு புதிய துளிரினை எழும்பச் செய்கின்றது என்றார். இத்துளிரி—ருக்கும் புதுமைகள் தான் என்ன?

அடிமைப்படுத்த அல்ல அரவணைக்க
சிறைப்படுத்த அல்ல விடுதலைத்தர
அநீதி செய்ய அல்ல நீதி செய்ய

இத்தகு நன்மையான தகவுகளை துளிராகிய மேசியா உலகில் தரதோன்றுவார். மேசியாவின் ஆளுகை மாற்றங்கள் நிறைந்ததாய் அமையும். மாற்றங்கள் அடிமட்டத்தி—ருந்து மட்டுமல்ல எத்தளத்திலும் ஏற்படும் என குறிப்பிட்டார். ஓநாயைப் போன்ற மூர்க்க குணம், பதுங்கி தாக்கும் தீய குணங்களில் வாழுபவர்கள் மாற்றம் பெற்று ஆட்டுக்குட்டியை அரவணைப்பார்கள். சிங்கம் போன்ற ஆற்றலுடையவர்களும் அரச தன்மையுடையவர்களும் சாதாரணமானவர்களுடன் இறங்கி வருகின்ற மாற்றங்கள் உருவாகும். விரியன் பாம்பை போன்ற கொடிய விஷத்தன்மைகளை உடையவர்கள் தங்கள் தோல் சட்டையை மட்டும் மாற்றுகின்ற நிலை மாறி விஷத்தையே கக்கிவிடுகின்ற மாற்றம் உருவாகும். இத்தகைய மாற்றங்களே மேசியா ஆளுகைக்கு அடையாளமாகும். நம்மில் இத்தகு மாற்றங்கள் நிகழட்டும்.